அரசாங்க நிருவாகச் சுற்று நிருபம். 51/89(1)

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம் - கொழும்பு. 7
1989, நவம்பர் மாதம் 23ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாணச் சபைகளின் முதலமைச்சர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரசாங்கஅதிபர்களுக்கும்,
உள்ளூராட்சி பிரதேச ஆணையாளர்களுக்கும்.

அமைச்சு/திணைக்களங்கள்/உள்ளூராட்சி மன்றங்கள்/
மாகாணச் சபைகள் என்பவற்றில் கடமையாற்றும்
பணியாளர்கள் தொடர்பான தரவுகள்.

1989 ஒக்றோபர் மாதம் 23ஆந் திகதி இல. 51/89 கொண்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கையுடன் தொடர்புடையதாகும்.

2. மாகாணச் சபைகளின் பணியாளர்கள் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அரச துறையிலும், உள்ளூராட்சிச் சேவையிலும் இருந்து உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் பொருட்டு மேலதிக பணியாளர்கள் தொகையை கணிக்கும் பொருட்டும் இவ்வமைச்சில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. கருத்திட்ட பணிப்பாளராக இவ்வமைச்சின் திரு. ஜே. வீரசூரிய அவர்கள் கடமையாற்றுவார். அவரின் தொலைபேசி இல. 693816 ஆகும்.

3. தயவு செய்து பணியாளர் தொடர்பான கருத்திட்டத்தில் கூட்டிணைப்பு நடவடிக்கையின் பொருட்டு உங்கள் அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்திலிருந்து சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை தேர்ந்தெடுத்து அவரின் பெயர், பதவி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை எனக்கு அறிவிக்கவும். இல. 51/89 கொண்ட அரசாங்க நிருவாக சுற்று நிருபத்தில் தற்போது கேட்கப்பட்டிருக்கும் விபரங்களுக்கு மேலதிகமாக இச்சுற்று நிருபத்தில் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் கேட்கப்படும் விபரங்களையும் 1989 டிசம்பர் 03ஆந் திகதிக்கு முன்பு கருத்திட்ட பணிப்பாளருக்கு கிடைக்கும்படி அனுப்பவும். இவ்விபரங்கள் மிகவும் அவசரமாகத் தேவைப்படுவதினால் இவற்றை காலதாமதமின்றி அனுப்பி வைக்கவும்.

இல. 51/89 கொண்ட அரசாங்க சுற்று நிருபத்திற்கு இணங்க வேண்டிய விபரங்கள் தற்போதைக்கு வழங்கப்பட்டிருப்பின் அதன் பிரதிகளுடன் தற்போது கேட்கப்படும் விபரங்களை ஒப்பிட்டுப் பார்த்து பணியாளர்கள் எண்ணிக்கைத் தொடர்பான தரவுகளை எனக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

ஒப்பம். பி. எச். எம். பெர்னாந்து.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

(எம். எச். ஜுனைட்)
அரசாங்க நிருவாக, இராஜாங்க
அமைச்சின் செயலாளரும்,
மேலதிகச் செயலாளரும்.

[illegible]